ப்ரியா கல்யாணராமன்



ஒரு நாள் முழுக்க நான் மட்டும் மானசரோவரில் தனித்திருந்தேன்.

உலகின் மிக அழகிய அந்த ஏரியைச் சுற்றிச் சுற்றி வந்தேன். புகைப் படங்கள் எடுத்தேன். பிள்ளையாரும், முருகனும் அவதரித்த மாந்தாதா மலையைப் ப்ரியத்துடன் பார்த்தேன். எட்டிப் பார்க்கும் கைலாஷைப் பரவசத்துடன் வணங்கினேன். கொஞ்ச நேரம் என் குட்டி டென்ட்டில் பதுங்கினேன். குளிரில் நடுங்கினேன்.

மிருகம் போல் காட்சியளிக்கும் ராட்சஸ்தல்




(சத்குருவுடன் கைலாஷ் - மானசரோவர் உற்சாக யாத்திரை)



# தமிழ் மன்னன் தவமிருந்த தடாகம்!

மானசரோவரில் தனியாக இருப்பது என்பது ரொம்ப கஷ்டம். பேச்சுத் துணைக்கு மொழி புரியாத ஒரு திபெத்தியன் இருந்தால் கூடத் தேவலை என்றுதான் எனக்குப்பட்டது. அங்கே சின்னதாய் மூன்று அழுக்கான பெட்டிக் கடைகள் மட்டுமே இருக்கின்றன. அதுவும் கொஞ்சம் பெரிய சைஸ் டென்ட் அவ்வளவுதான். சீஸன் முடிந்தவுடன் கடையைச் சுற்றிக் கொண்டு கிளம்பிவிடுவார்கள்.

குளிர் பானங்கள்(!), தேநீர், பிஸ்கட்ஸ், சாக்லெட்ஸ், டீ ஆகியவற்றை அங்கே விற்கிறார்கள். டென்ட் வசதியுடன் வராதவர்கள் அந்தக் கடைக்குள்ளேயே தங்கிக் கொள்ளவும் அனுமதிக்கிறார்கள். கட்டணம் உண்டு. நடுங்கும் குளிரில் ஒரு கோக் அருந்துவது நன்றாகத்தான் இருக்கிறது!

இறுதியில் ஒரு நேபாள டிரைவரை ஓரங்கட்டினேன்.

**"மானசரோவரை காரிலேயே சுற்றி வரலாமா? பிரதட்சணம்? 100 யுவான் கொடுத்தால் போதும்" என்றான் அவன்.**

எனக்கு வேறு ஒரு திட்டம் இருந்தது. "அது வேண்டாம். ராட்சஸ்தல் போய் வரவேண்டும். வருகிறாயா? நீ கேட்ட காசைத் தருகிறேன்" என்றேன் நான்.

அவன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான். " என்னது ராட்சஸ்தலா? உங்களுக்கு ஏதாவது ஆகிவிட்டதா?" என்றான் அவன். தலையாட்டி மறுத்தான்.

நான் பிடிவாதமாய் இருக்கவே கடைசியில் ஒப்புக் கொண்டான்.

**அது என்ன ராட்சஸ்தல்? அங்கே வர அவன் மறுத்தது ஏன்?** அங்கே செல்ல நான் ஆசைப்பட்டது ஏன்?


மானசரோவர் பெட்டிக்கடை

மானசரோவர் போலவே அதுவும் ஓர் ஏரி. ஆனால் மானசரோவர் தேவர்கள், கடவுள்களின் ஏரி என்றால், அது ராட்சசர்கள், அரக்கர்களின் தடாகம். அந்த ஏரிப் பக்கம் அதனாலேயே யாரும் செல்வதில்லை. அந்தத் தண்ணீரைத் தொடுவது கூட இல்லை.

நான் மட்டும் அங்கே செல்லவேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததற்குக் காரணம் இருக்கிறது. ஒரு தமிழ் மன்னன் தவம் இருந்த இடம் அது.

நான் யாரைச் சொல்கிறேன் தெரிகிறதா? ஆம். மாமன்னன் ராவணன்தான் அவன்!

## ( ராவணன் தவம் செய்தது இங்கேதான் )



ராமபிரானின் மனைவியைக் கவர்ந்தான் என்ற ஒரே ஒரு மாபெரும் தவறைச் செய்தானே தவிர, ராவணன் மாபெரும் தமிழ்ப் பண்டிதன். சிறந்த சிவ பக்தன். நீதி நெறியுடன் ஆட்சி புரிந்தவன். சகல கலைகளையும் கற்றவன். மிகச் சிறந்த பாடகன். ஆணழகன்!

அந்தத் தமிழ் மன்னன் ராவணன் தவம் செய்த இடம் என்பதால்தான் நான் ராட்சஸ்தல் ஏரியைப் பார்க்க ஆசைப்பட்டேன்.

நாங்கள் கிளம்பினோம். பத்து கிலோ மீட்டர் தூரம். அதிகம் பேர் போகாத இடம் என்பதால் பாதை கரடுமுரடு. டிரைவர் கொஞ்சம் எரிச்சலுடன்தான் வந்தான் என்பது, அவன் வண்டி ஓட்டும் விதத்திலிருந்தே புரிந்தது.

வானத்திலிருந்து பார்த்தால் இந்த ஏரி ராட்சஷமிருகம் ஒன்று நிமிர்ந்து நிற்பதைப் போல காட்சியளிக்கும் என்று எப்போதோ படித்தது நினைவுக்கு வந்தது.

• இதோ ராட்சஸ்தல்லை நெருங்கிவிட்டோம். டிரைவர் வண்டியை ரொம்ப முன்னாலேயே நிறுத்திவிட்டு, " நடந்து போங்க" என்றான். "அருகில் போகலாமே?" என்று கேட்டபோது, **"அது அசுரர்களின் ஏரி. அதன் அருகில் சென்றால் கார் ரிப்பேர் ஆகிவிடும். நான் வர மாட்டேன்.** நீங்கள் மட்டும் போய்ப் பார்த்துவிட்டு சீக்கிரம் வந்து விடுங்கள்" என்றான் எரிச்சலாக.

நான் உற்சாகமாக ராவணன் ஏரியை நோக்கி நடந்தேன். பிரமாண்டமான தடாகம் அது. மானசரோவர் அளவுக்குப் பெரிதில்லை என்றாலும் 125 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டது. நடுவில் சின்னதாய் இரண்டு மூன்று திட்டுகள் உள்ளன. அந்தத் தீவுத் திட்டில்தான் ராவணன் தவம் செய்தான் என்கின்றன புராணங்கள். அதனால் அதற்கு ராவணன் திட்டு என்றே பெயர் வழங்குகிறது. ராட்சஸ்தல்லை ராவணன் ஏரி என்றும் அழைக்கிறார்கள். அந்தத் திட்டுகளில் ஏராளமான பறவைகள் மனிதத் தொந்தரவுகள் இன்றி பறந்து திரிகின்றன.

மானசரோவருக்கும் இந்த ராவணன் ஏரிக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதைக் கண்டுகொண்டேன். அது என்ன தெரியுமா? மானசரோவரில் அலைகள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றன. இங்கே அலைகள் எல்லாம் இல்லை. அமைதி! அமானுஷ்யம்! பறவைகளின் ஒலி வேறு பயமுறுத்துகிறது. ஒரே நம்பிக்கை, வடக்கு திசையில் தொலைவில் தெரியும் கைலாஷ்!

**இந்த ராவணன் தடாகத்தில் யாரும் நீராடுவதில்லை. ஏன் தண்ணீரைத் தொடுவது கூட இல்லை.** காரணம் இது அசுரர்கள் தவம் செய்த இடம். இந்தத் தடாகத்தில் அரக்கர்கள் தங்கள் தலைகளை வெட்டிக் கொண்டு, கை, கால்களை அறுத்துக் கொண்டு என்று தங்கள் உடலை வறுத்திக் கடுமையாகத் தவம் இருந்தார்கள் என்பதால் இந்த இடத்தைக் கண்டாலே அனைவருக்கும் அச்சம்! அது மட்டுமல்ல, மிச்சம் இருக்கும் அசுர வம்சத்தினரும் இந்த ஏரியின் அடியில் வசிப்பதாக ஒரு நம்பிக்கையும் திபெத்தியர்களிடம் உண்டு. அதனால் இந்த நீரை யாரும் தொடுவது கூட இல்லை.

இந்தத் தண்ணீரை ஆராய்ச்சி செய்தபோது உப்புடன் அதிக அளவு மெக்னீஸியம் கலந்திருப்ப தால் மனிதர்கள் உபயோகப் படுவதற்குத் தகுதியான நிலையில் இந்த நீர் இல்லை என்றே ரிப்போர்ட் அளிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும் கொஞ்சம் தண்ணீரை எடுத்து நான் தலையில் தெளித்துக் கொண்டேன். காரணம், இது தமிழ் மன்னன் ராவணன் தவம் செய்து சிவனை தரிசனம் செய்த இடம். அது மட்டுமல்ல, அலைகள் பரவாத இந்த தடாகத் தண்ணீரில் கைலாஷ் மலை முழுவதுமாகப் பிரதிபலிப்பதைக் கண்டு அசந்து போனதும்தான் காரணம். கைலாஷே பிம்ப மாக எட்டிப் பார்க்கும் தண்ணீரில் அசுரர்களாவது, விஷமாவது என்ற எண் ணம் என்னுள் மேலோங்கி

**அமைதி, அமானுஷ்யம், அச்சம்!**

யது. கைலாஷே உள்ளிறங் கியிருப்பதால் அத்தனை தீய அம்சங்களும் காணாமல் போயிருக்காதா? எனவே இதுவும் இப்போது புனிதம்தான் என்று எனக்குள் தோன்றிற்று.

சரி, ராவணன் இங்கே தவம் செய்த கதையைக் கொஞ்சம் பார்க்கலாமா? ●

**(உற்சாகம் தொடர்கிறது)**

